**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**தாராபுரம்**

**முன்னிலை : திரு.C.M.சரவணன், பி.ஏ.,எல்.எல்.எம்.,**

மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தாராபுரம்.

**2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27- ம் நாள் வியாழக்கிழமை**

**இடைக்கால மனு எண். 2/2022**

**இன்**

**முதலேற்பு வழக்கு எண்.11/2020**

நந்தகுமார் .....மனுதாரர்/கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்

// எதிர் //

1. சாமியாத்தாள்

.... எதிர்மனுதாரர்/வாதி

2. பூவாத்தாள்

3. வள்ளியாத்தாள்

4.சாமியப்பன்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 20.02.2025-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/கட்சி சேர்க்கப்படவேண்டியவர் தரப்பில் திரு.K.M.மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதார/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வெங்கடாச்சலம் அவர்கள் ஆஜராகியும், 4-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அங்குராஜ், அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் ஆஜராகத நிலையில் ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இந்த மனு உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன் படி, மனுதாரரை 4-ம் பிரதிவாதியாக சேர்க்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

அசல் வழக்கில் இவ்வழக்கின் வாதி, பிரதிவாதிகள் பேரில் பாகப்பிரிவினை மற்றும் சுவாதீனம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் ஒரு பொங்கியாகவுண்டருக்கு பிதுராஜ்ஜியத வகையிலும் மற்றும் சுயராஜ்ஜிய வகையிலும் பாத்தியப்பட்ட சொத்துக்கள். மேற்படி சங்கதியை அசல் வழக்கில், வாதியே ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி பொங்கியாகவுண்டருக்கு சென்னிமலைகவுண்டர், ராமசாமிகவுண்டர் மற்றும் ஒரு சாமியப்பகவுண்டர் ஆகியோர்கள் தான் சட்டப்படியான வாரிசுதாரர்கள். பொங்கியாகவுண்டர் தான் இறக்கும் வரையில் அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்கள் உள்ளிட்ட இதர சொத்துக்களை பொறுத்து எவ்வித ஆவணங்களையும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார். மேலும் மேற்படியாரின் சொத்துக்கள் அனைத்தும் பொது குடும்ப சொத்துக்களாகவே அவரது மூன்று ஆண் மக்களாலும் அனுபவிக்கப்பட்டு வருகின்றது. சொத்துக்கள் அனைத்தும் பொது குடும்ப சொத்துக்களாகவே அவரது மூன்று ஆண் மக்களாலும் அனுபவிக்கப்பட்டு வருகின்றது. தாவாவில் கூறியுள்ளபடி பொங்கியாகவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது ஆண் மக்களிடையே வாய்மொழியாக நிரந்தர பாகக்கரார் ஏதும் ஏற்படவில்லை. மேலும், பொதுகுடும்ப வருமானத்தில் இருந்து பெறப்பட்ட தொகையின் மூலம் குடும்ப சூழ்நிலை காரணமாக பொங்கியாகவுண்டரின் மகன்களின் பேரிலும் சில சொத்துக்கள் வாங்கப்பட்டன. அவையும் பொது குடும்ப சொத்துக்களாகவே பாவிக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி, உண்மைகள் தாவாவில் மறைக்கப்பட்டுள்ளது. வாதிகள், பொங்கியாகவுண்டரின் மேற்படி ஆண் மகனான லேட்.சென்னிமலைகவுண்டரின் வாரிசுதாரர்கள். மனுதாரர் பொங்கியாகவுண்டரின் மற்றொரு ஆண் மகனான லேட்ராமசாமிகவுண்டரின் மகள் வழி பேரன்.

மேலும் மேற்படி ராமசாமிகவுண்டரின் சட்டப்படியான வாரிசு. பொங்கியாகவுண்டரின் மற்றொரு ஆண் வாரிசான சாமியப்பகவுண்டர், தாவா சொத்தில் பொங்கியாகவுண்டரின் வாரிசுதாரர்களான வாதிகள் மற்றும் மனுதாரர் மற்றும் சாமியப்பகவுண்டர் ஆகியோர்கள் அனைவருக்கும் சட்டப்படி பாத்தியம் உண்டு. அதனை மறைத்து அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். பொங்கியாகவுண்டரின் மக்களிடையே எவ்வித வாய்மொழி பாகக்கராரும் ஏற்படவில்லை. அயிட்டம் 2 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் சென்னிமலைகவுண்டர் பெயரில் கிரையம் பெற்றிருந்தாலும், அவை பொங்கியாகவுண்டருக்கு பாத்தியப்பட்ட அவரது மூன்று ஆண்மக்களும் பொதுவில் அனுபவித்த பொது குடும்ப வருமானத்தை கொண்டு சென்னிமலைகவுண்டரின் பேரில் கிரையம் பெற்ற சொத்துக்கள். மேற்படி சொத்தில் உபயவாதிகள் தனித்து பாத்தியம் கோர முடியாது. மேலும், தாவா சொத்தில் ஒரு பகுதியில் அவருடைய தாய்வழி தாத்தா ராமசாமிகவுண்டர் தறிப்பட்டறை வைத்து நடத்தி வந்துள்ளார். பின்னிட்டு அதனை மனுதாரர் அனுபவித்து வருவதாகவும், மேலும் தாவா சொத்தில் ஒரு பகுதியில் அவரது தாய்வழி தாத்தா ராமசாமிகவுண்டர் குடியிருந்தார். மேற்படி வீட்டில் மனுதாரர் அனுபவித்து வருவதாகவும், மேலும் தாவா சொத்தில் ஒரு பகுதியில் அவரது தாய்வழி தாத்தா ராமசாமிகவுண்டர் குடியிருந்தார். மேற்படி வீட்டில் மனுதாரர் பிறந்ததிலிருந்து இன்று வரை அவரது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், மேற்படி உண்மைகளை மறைத்து தாவாவினை உபயவாதிகள் கூட்டு சதி செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆகையால் இந்த வழக்கில் தான் அவசியமான கட்சிக்காரர். எனவே, அசல் வழக்கில், மனுதாரரை 4-ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து மேற்படி வழக்கை தொடர்ந்து நடத்த உத்திரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. மனுதாரரை, இவ்வழக்கில் 4-ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து வழக்கினை நடத்துவதில் தொடர்ந்து இம்மனுவின் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. அப்போது தான் இவ்வழக்கில் சரியான தீர்வை எட்ட இயலும். அல்லாத பட்சத்தில் இவ்வழக்கு சொத்தில் மனுதாரரின் உரிமையும்,

பாதிக்கப்படுவதோடு அவருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். மனுவை அனுமதிக்க வேண்டும்.

**3) 1-ம் எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

**3.1)** மனுதாரரின் மனு சட்டப்படியும், சங்கதிகளின் படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரரே மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை நிருபிக்க வேண்டும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு 3-வது பாராவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளான தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆகியவை ஆதியில் பொங்கியா கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதும், மேலும் பொங்கியா கவுண்டருக்கு மூன்று வாரிசுகள் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு 3-வது பாராவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளான பொங்கியா கவுண்டர் இறந்த பிறகு அவரது மூன்று ஆண் வாரிசுகளிடையே வாய்மூலமாக நிரந்தர பாகக்கரார் ஆகவில்லை என கூறுவது தவறாகும். மேற்படி பொங்கியாகவுண்டரின் மூன்று வாரிசுகளிடையே வாய்மூலமாக பாகப்பிரிவனை ஏற்பட்டு தனித்தனியாக அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்த நிலையில், சென்னிமலைகவுண்டர் மற்றும் ராமசாமிக்கவுண்டர் ஆகிய இருவரும் இறந்து விட்டார்கள். மேற்படி சென்னிமலைகவுண்டர் உயிருடன் இருந்த போது, அவரது சுய சாம்பாத்திய வருமானத்தை கொண்டு சில சொத்துக்கள் சென்னிமலைகவுண்டரது பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி சொத்தில், இந்த மனுதாரருக்கு எவ்வித பாத்தியமும் உரிமையும் இல்லையென தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சென்னிமலைகவுண்டரது பெயரில் வாங்கப்பட்ட கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்தைப் பொருத்து, மனுதாரர் பாக உரிமை கோர முடியாது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு 4, 5, மற்றும் 6-வது பாராவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் எவ்வித வாரிசு சான்றும் தாக்கல் செய்யாமல் வாரிசு என்று கூறுவது தவறாகும். மேலும், மனுதாரர் அவரது முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டதாக கூறும் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கில் தேவையான தரப்பினர் என கூறுவது தவறாகும். மேலும் தாவா சொத்துக்களில் பல்வேறு அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் எந்த எந்த சொத்துக்கள் மனுதாரருக்கு அவரது தந்தை மற்றும் தாத்தா மூலமாக பாத்தியம் என எவ்வித ஆவணமும்,

ஆதாரமும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கில் தேவையான தரப்பினராக சேர்க்க வேண்டும் என கூறுவது தவறாகும். ஆகையால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் எவ்வித அடிப்படை ஆதாரமும், ஆவணமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

6) தீர்வு:-

7) இரு தரப்பும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில், தாவா சொத்துக்கள் பொங்கியாகவுண்டர் என்பவருக்கு பிதுராஜ்ஜியத வகையிலும், மற்றும் சுயராஜ்ஜிய வகையிலும், பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி சங்கதி வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், மேற்படி பொங்கியாகவுண்டருக்கு சென்னிமலைகவுண்டர், ராமசாமிகவுண்டர் மற்றும் ஒரு சாமியப்பகவுண்டர் ஆகியோர்கள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்றும், மேற்படி பொங்கியாகவுண்டர் தான் இறக்கும்போது தாவா சொத்துக்களைப் பொறுத்து எந்தவிதமான ஆவணங்களையும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாகவும், அவை பொதுக்குடும்ப சொத்துக்களாக அவரது மூன்று மகன்களாலும் அனுபவிக்கப்பட்டு வருவதாகவும், பொங்கியாகவுண்டரின் இறப்பிற்கு பிறகு வாய்மொழி பாகக்கரார் ஏதும் ஏற்படவில்லை என்றும், மேலும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பெறப்பட்ட தொகை மூலம் பொங்கியாகவுண்டரின் மகன்களின் பேரில் சில சொத்துக்கள் வாங்கப்பட்டன என்றும், அவை பொதுக்குடும்ப சொத்தாக பாவிக்கப்பட்டிருந்தன என்றும், அதைப் பொறுத்து வாதி, தன் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றும், வழக்கின் வாதிகள் பொங்கியாகவுண்டரின் ஆண் மகனான சென்னிமலைக்கவுண்டரின் வாரிசுகள் என்றும், மனுதாரர், பொங்கியாகவுண்டரின் மற்றொரு

மகனான ராமசாமிகவுண்டரின் மகள் வழி பேரன் என்றும், எனவே, ராமசாமிகவுண்டருக்கு தானும் சட்டடப்படியான வாரிசு என்றும், தாவா சொத்துக்களில், வாதிகள் மற்றும் மனுதாரர் சாமியப்பகவுண்டர் ஆகிய அனைவருக்கும் சட்டப்படி பாத்தியம் உள்ளது என்றும், அதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, தாவாவில் மனுதாரர் அவசியமான கட்சிக்காரர் என்பதால், அவரை 4-ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து வழக்கு நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8) மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின் போது, தாவா சொத்துக்கள் ஆதியில் பொங்கியாகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவருக்கு மூன்று வாரிசுகள் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், அவர் இறந்த பிறகு வாய்மொழி பாகக்கரார் ஏற்படவில்லை என்று கூறுவது தவறு என்றும், வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு, அதன் அடிப்படையில், அவரது மூன்று மகன்களும் தனித்தனி அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்த நிலையில், சென்னிமலைகவுண்டர் மற்றும் ராமசாமிக்கவுண்டர் ஆகியோர்கள் இறந்து விட்டார்கள் என்றும், மேற்படி, சென்னிமலைக்கவுண்டர் உயிருடன் இருந்தபோது, அவரது சுயசம்பாத்தியத்தில் கிடைத்த வருமானத்தை கொண்டு, சில சொத்துக்கள் சென்னிமலை கவுண்டர் பெயரில் வாங்கப்பட்டதாகவும், அதில் மனுதாரருக்கு எந்தவிதமான பாத்தியமும் உரிமையும் இல்லை என்றும், மனுதாரர் எவ்வித வாரிசு சான்றையும் தாக்கல் செய்யாமல், வாரிசு என கூறுவது தவறு என்றும், மனுதாருக்கு, அவரது தந்தை மற்றும் தாத்தா மூலமாக எந்த சொத்துக்களில் பாத்தியம் உள்ளது என்பது குறித்து, எந்தவிதமான ஆவணமும், ஆதாரமும் தாக்கல் செய்யாமல் உள்ள சூழ்நிலையில், இந்த வழக்கில், அவரை அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டும்

என கூறுவது தவறு என்றும், எனவே, இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9) இவ்வழக்கில், இருதரப்பிலும் தாவா சொத்துக்கள் பொங்கியப்பக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவருக்கு மூன்று வாரிசுகள் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவரது சொத்துக்களைப் பொறுத்து, வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்ற வாதியின் கூற்று மனுதாரரால் மறுக்கப்பட்டுள்ளது. மேலும், தான் பொங்கியப்பக்கவுண்டரின் வாரிசான ராமசாமிகவுண்டரின் மகள் வழி பேரன் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான வாரிசு சான்று எதுவும் மனுவுடன் இணைக்கப்படவில்லை. ஆனால், எதிர்மனுதாரர் எதிர் வழக்குரையில் மனுதாரர் தனக்கு தாத்தா மூலமாகவும், தந்தை மூலமாகவும், எந்த சொத்துக்களில் பாத்தியம் உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளதை பார்வையிடும்போது, மனுதாரர், மேற்படி ராமசாமிக்கவுண்டரின் வாரிசு இல்லை என்று குறிப்பாக எதிருரையில் மறுக்காத சூழ்நிலையிலும், மனுதாரர் மேற்படி பொங்கியாகவுண்டரின் மகனான ராமசாமிகவுண்டரின் வாரிசு என்று கூறும் நிலையிலும், இவ்வழக்கை முடிவு செய்வதில் அவர் அவசிய தரப்பினர் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. உண்மையில், அவர் வாரிசுரிமை அடிப்படையில் பொங்கியப்பகவுண்டரின் சொத்துக்களில் பாகம் பெற அருகதையுள்ளவரா என்ற சங்கதி பின்னிட்டு, வழக்கு விசாரணையின் போது முடிவு செய்யப்படும் என்றும், மனுதாரரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து இவ்வழக்கை நடத்துவது, இவ்வழக்கில் இறுதி முடிவை எட்டுவதற்கு உதவியாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்கிறது.

27/02/2025 III ADJ,DPM

முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகைக்கான உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.02.28 18:26:39 +0530

3- வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தாராபுரம்.

**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.02.28 18:26:46 +0530

3 வது கூடுதல் மாவட்ட & அமர்வு நீதிபதி,

தாராபுரம்.

Order IN
IA.No.2/2022 IN
OS.No.11/2020
Date:27.02.2025